# அக்கினியின் நடுவில் நடந்த மூன்று விசுவாசமுள்ள மனிதர்கள்

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே! மூன்று வைராக்கியமுள்ள யூதர்களை இராஜா கொழுந்துவிட்டு எரியும் உலைக்குள் போட்ட போது, அவர்களுக்கு இருந்த அதே விசுவாசமும் தைரியமும் உள்ளவர்களாய்ப் பாடுகளை எதிர்கொள்ள எங்கள் குழந்தைகளை ஆயத்தப்படுத்துவீராக."

குழந்தைகளின் வயதுக்கு ஏற்ற கல்வி செயல்பாட்டைத் **தெரிந்து கொள்க.**

**தானியேல் மூன்றாம் அதிகாரத்தில்** இருந்து ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ கதையை வாசிக்கட்டும் அல்லது மனப்பாடமாகக் கூறட்டும். ஒரு விக்கிரகத்தை வழிபடுவதைக் காட்டிலும் நெருப்பின் மூலம் மரணத்தை எதிர் கொண்ட மூன்று தைரியமான மனிதர்களின் கதை அது.

இந்தக் **கேள்விகளைக்** கேட்கவும் *(தானியேல் மூன்றாம் அதிகாரத்தில் இருந்து பதில்கள் ஒவ்வொரு கேள்வியின் பின்னும் வருகிறது).*

- தன்னுடைய சிலைக்கு முன்பாக மக்கள் என்ன செய்ய வேண்டும் என்ற இராஜா கட்டளை இட்டான்? *(5).*
- தன்னுடைய சிலையை மூன்று இளைஞர்கள் வணங்கவில்லை என்று அறிந்த இராஜா என்ன செய்தான்? *(13).*
- தேவனால் என்ன செய்ய முடியும் என்று அந்த மூன்று இளைஞர்களும் கூறினர்? *(17).*
- தேவன் தங்களை இரட்சிக்காவிட்டால் அவர்கள் சாவதற்கு தயாராக இருந்தார்களா? *(18).*
- அவர்களை சூளைக்குள் எறிந்த வீரர்களுக்கு என்ன நேர்ந்தது? *(22)*
- அக்கினியின் மத்தியில் இராஜா எத்தனை மனிதர்களைக் கண்டான்? *(25)*

தானியேல் 3 லிருந்து மூன்று விசுவாசம் உள்ள மனிதர்களைப் பற்றிய கதையை **நாடகமாக்குக.**

சபைத்தலைவரோடு பேசி குழந்தைகள் இந்த நாடகத்தை அரங்கேற்ற **ஏற்பாடு செய்க.** குழந்தைகளுடன் உங்கள் நேரத்தை செலவிட்டு இந்த நாடகத்தை தயாரிக்கவும். எல்லா பகுதிகளையும் பயன்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. தங்கள் பாத்திரங்களைப் பயிற்சி செய்ய சிறிய குழந்தைகளுக்குப் பெரிய குழந்தைகள் உதவி செய்யலாம்.

- **பெரியவர்களோ அல்லது பெரிய பிள்ளைகளோ** நடிக்க வேண்டியவை:

  **கதை கூறுபவர்:** கதைச் சுருக்கம் கூறி குழந்தைகள் நடிக்க பேச வேண்டியவற்றை ஞபாகப்படுத்துபவர்.

  **நேபுகாத்நேச்சார் இராஜா:** ஒரு விக்கிரகத்தைக் குறிக்கும் ஏதாவது ஒன்றை வைத்துக் கொள்ளவும்.

  **பிரதான அதிகாரி**

- **சிறிய குழந்தைகள்** நடிக்க வேண்டிய பாத்திரங்கள்:

  **சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ**

  இராஜாவின் அதிகாரிகள். ஊதும் எக்காளத்தைக் குறிக்க காகித்தைச் சுருட்டி வைத்துக் கொள்ளவும்.

  போர்ச்சேவகர்கள் ஈட்டிக்கு பதிலாக கம்புகளையும், கயிறுக்குப் பதிலாக நூலையும் வைத்துக் கொள்ளவும்.

**கதை கூறுபவர்:** தானியேல் 3:1-13 ல் இருந்து கதையின் முதல் பகுதியைக் கூறவும். "நேபுகாத்நேச்சார் கூறுவது என்ன என்பதைக் கேளுங்கள்."

**நேபுகாத் நேச்சார்:** எல்லாரும் பார்க்கும்படியாக சிலையை நிறுத்துகிறான். பின் கூறுகிறான், "என்னுடைய உருவச் சிலையை நீங்கள் எல்லோரும் வணங்க வேண்டும் என்று கட்டளை கொடுக்கிறேன். இசை முழங்கும் போது அவ்வாறு நீங்கள் செய்யாவிட்டால் உங்களை நான் அக்கினிச் சூளையிலே போடுவேன்."



**அதிகாரிகளும் பிரதான அதிகாரியும்:** சத்தமாக எக்காளத்தை ஊதி சிலையை விழுந்து பணிந்து கொள்ளுகின்றனர்.

**சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ:** சிலைக்கு முன் நடந்து அப்படியே நிற்கின்றனர்.

**போர்வீரர்கள்:** எக்காள ஓசை நிற்கும் வரை விழுந்து பணிந்து கொள்ளுங்கள்.

**அதிகாரிகள்:** எக்காளம் ஊதுவதை நிறுத்திவிட்டு இராஜாவிடம் செல்லுகின்றனர்.

**பிரதான அதிகாரி:** "மகா இராஜாவே! உம்முடைய மூன்று அதிகாரிகள் உமது சிலையை வணங்கவில்லை."

**இராஜா** : (கோபத்துடன்) "போர் வீரர்களே! போய் அந்த துரோகிகளை உடனடியாக என்னிடத்தில் கொண்டு வாருங்கள்."

**கதை கூறுபவர்:** தானியேல் 3:14-23 ல் இருந்து கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும். பின், "நேபுகாத்நேச்சார் மூன்று பேரிடமும் என்ன கேட்கிறான் என்பதைக் கேளுங்கள்."

**இராஜா** : "நீங்கள் ஏன் என் சிலையை வணக்கவில்லை?"

**சாத்ராக்** : மேலே சுட்டிக்காட்டி, "நாங்கள் ஒரே மெய் தேவனையே வணக்குகிறோம்."

**மேஷாக்** : "எல்லாம் வல்லவர் விரும்பினால் எங்களைத் தப்புவிப்பார்."

**ஆபேத்நேகோ:** "தேவன் நீர் எங்களை நெருப்பில் போடும்படி விட்டு விட்டாலும், உமது சிலையை நாங்கள் வணங்க மாட்டோம்!"

**இராஜா** : (சத்தம் போட்டு) "வீரர்களே! சூளையை ஏழுமடங்கு சூடாக்குங்கள். இவர்களை அக்கினியிலே போடுங்கள்."

**வீரர்கள்** : மூவரையும் கட்டி ஒரு மூலையில் (சூளை) தள்ளவும். பின், வலியால் கத்தி, ஈட்டிகளை விட்டுவிட்டு, வெப்பத்தால் செத்து விழவும்.

**கதை கூறுபவர்:** வசனங்கள் 24-30 ல் இருந்து கதையின் மூன்றாவது பகுதியைக் கூறவும். பின், "நேபுகாத்நேச்சார் இராஜா என்ன சொல்லுகிறான் என்பதைக் கேளுங்கள்."

**இராஜா** : சூளைக்குள் எட்டிப் பார்க்கிறான். "நாம் மூன்று பேரை அல்லவா சூளைக்குள் எறிந்தோம். ஆனால் இப்போது நான்கு பேரைப் பார்க்கிறேன். நான்காவது மனிதன் பார்ப்பதற்கு தேவகுமாரனைப் போல் இருக்கிறான். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ! வெளியே வாருங்கள்!"

**பிரதான அதிகாரி:** "பாருங்கள்! கயறு எரிந்து போய்விட்டது. ஆனால் இவர்கள் மேல் அக்கினியின் மணம் வீசவில்லை."

**இராஜா** : "சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ! எந்த சிலையை விடவும் உங்கள் கடவுள் மிகவும் வல்லமை உடையவர் என்பதை இப்போது அறிகிறேன்."

**கதை கூறுபவர்:** நாடகத்தை அரங்கேற்ற உதவிய யாவருக்கும் நன்றி கூறவும்.

**கேள்விகள்:** சிறுவர்கள் இந்த நாடகத்தை பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால், மேலே பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் அவர்களிடம் சிறுவர்கள் கேட்கவும்.

நான்கு மனிதர்கள் அக்கினியின் மத்தியில் நிற்பது போல் **படம் வரையவும்.** பிள்ளைகள் அதைப் பார்த்து வரையட்டும். அடுத்த ஆராதனை வேளையின் போது பெரியவர்களிடம் படத்தைக் காட்டி சோதனையான நேரங்களில் தேவன் எவ்வாறு பாடுகளை சந்திக்க நமக்கு உதவுகிறார் என்பதை இது சித்திரிக்கிறது என்று விளக்கம் அளிக்கவும்.



தேவ மக்கள் பாடுகளை அனுபவித்த காலங்களைப் பற்றி வேறு உதாரணங்களைக் கூறுமாறு பிள்ளைகளிடம் கேளுங்கள். தேவன் அவர்களை விடுவித்த சமயங்களைப் பற்றி கூறுங்கள்.

**மனப்பாடம்:** சிறிய பிள்ளைகள்: யாக்கோபு 1:2; பெரிய பிள்ளைகள்: யாக். 1:2-4.

**சங்கீதம்: 138:4-7** ஐ நான்கு சிறுவர்கள் தலைக்கு ஒன்றாக ஒப்புவிக்கட்டும்.

இந்த வாரத்தின் தலைப்பு பற்றி பெரிய பிள்ளைகள் கவிதைகளோ பாடல்களோ எழுதட்டும்.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே இந்த மூன்று இஸ்ரவேலர்களையும் போல நாங்கள் எப்போதும் தைரியமாக இருப்பதில்லை. பாடுகளை சந்திக்கும் போது உம்மை நம்பும்படியாக உதவுவீராக. உம்மால் எங்களை விடுவிக்க முடியும். உமக்காக நாங்கள் தீங்கு அனுபவிக்கும் போதும் நாங்கள் உமக்கு உண்மை உள்ளவர்களாக இருக்க விரும்புகிறோம். ஏனெனில் நீர் எப்போதும் எங்களோடு இருக்கிறீர்."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net